**அறிவித்தல் இல. R/2025/20**

**வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் காணப்படும் உயிரியல் மருத்துவ பொறியியலாளர் (Biomedical Engineer) தரம் III பதவிக்கு திறந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்புச் செய்தல் - 2025**

அமைச்சரவை அலுவலகத்தின் செயலாளர் அவர்களின் CP/DEC/25 இலக்க 2025.07.16ம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்டுள்ள 2025.07.07ம் திகதிய அமைச்சரவைக் கூட்ட தீர்மானத்தின் பிரகாரம், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரின் NP/04/01/Recruitment/2025 இலக்க 2025.08.04ம் திகதிய சிபார்சுக்கு அமைவாகவும், **வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் காணப்படும் உயிரியல் மருத்துவ பொறியியலாளர் தரம் III பதவிக்கு காணப்படும் நான்கு (04)** பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இவ் ஆட்சேர்ப்புக்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வானது வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் **2026ம் ஆண்டு ஜனவரி மாதமளவில்** நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் **இறுதித்திகதி 2026.01.05** ஆகும்.

## 01. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :-

01.1 2016.01.01 திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர் சேவைப்பிரிவின் **உயிரியல் மருத்துவ பொறியியலாளர்** பதவிக்கான சேவைப்பிரமாணக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், மாகாண நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2310/29 ஆம் இலக்க 2022.12.14ம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை மற்றும் இப்பதவியுடன் தொடர்புபட்டு, காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் விதிகள், கட்டளைகள் ஆகியவற்றிற்கு உட்பட்டு, தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் குறித்த **உயிரியல் மருத்துவ பொறியியலாளர் பதவியின் தரம் III இற்கு** நியமிக்கப்படுவர்.

01.2 கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வின் மூலம் நியமனத்திற்கு தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நியமனத் திகதியிலிருந்து **மூன்று (03) வருடங்களிற்கு தகுதிகாண்கால அடிப்படையில்** உயிரியல் மருத்துவ பொறியியலாளர் பதவி தரம் III இற்கு நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு உயிரியல் மருத்துவ பொறியியலாளர் பதவி தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

01.3 இச்சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.

01.4 ஒரு சேவை நிலையத்தில் நியமனம் பெறுபவர், அதே சேவைநிலையத்தில் குறைந்தது **ஐந்து (05)** வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றுதல் வேண்டும் என்பது கட்டாய நிபந்தனையாகும்.

01.5 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமையவும், நியமனத் திகதியிலிருந்து **மூன்று (03)** வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

01.6 நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். எனினும் அறிவிக்கப்பட்ட இவ் வெற்றிடங்கள் தொடர்பில் பகுதியளவு வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

## 02. சம்பள அளவுத்திட்டம் :-

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை **10/2025** க்கு அமைவான, சம்பளத் தொகுதி **SL 1 - 2025** க்கு ஏற்ப **உயிரியல் மருத்துவ பொறியியலாளர்** பதவி தரம் - III ற்கான திரட்டிய சம்பள அளவுத்திட்டமானது ரூபா. **82,150 - 10 x 2,400 - 8 x 2,940 - 17 x 3,900 - 195,970/-** ஆகும். (இவ் அளவுத்திட்டத்தின் நான்காவது படிநிலையை அடைய முன் முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் **அட்டவணை - III** இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக விதித்துரைக்கப்பட்ட சம்பளம் இப்பதவியின் பொருட்டு வழங்கப்படும்.

## 03. பொதுவான தகைமைகள் :-

03.1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

03.2. விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். இவ் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் உள்ள ஆறு (06) ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது மூன்று (03) ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

அல்லது

விண்ணப்பதாரர் அல்லது அவரது பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

*கட்டமைக்கப்பட்ட **நேர்முகப் பரீட்சையின்** போது தமது நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்துவதற்கு வாக்காளர் பட்டியலின் பிரித்தெடுப்பிதழினை சமர்ப்பித்தல் வேண்டும்

03.3. விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த உடல், உள ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்

03.4. விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

03.5. விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று 21 வயதிற்கு குறையாதவராகவும், 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

03.6. விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் **இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் சகல தகைமைகளையும்** கொண்டிருத்தல் வேண்டும்.

**04. கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் :-**

04.1 கல்வித் தகைமைகள் :

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து, உயிரியல் மருத்துவ பொறியியல் (Biomedical Engineering) துறையில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

04.2 அனுபவம் :

அனுபவம் சிறப்புத் தகைமைகளாகக் கருத்தில் கொள்ளப்படும்.

05. ஆட்சேர்ப்பு முறை :-

05.1 கட்டமைப்புச்சார் நேர்முகப்பரீட்சையின் மூலம் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள், சேவைப் பிரமாணக்குறிப்பு, தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாக **உயிரியல் மருத்துவ பொறியியலாளர் தரம் III** பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இவ்வறிவித்தலில் விண்ணப்பதார்களிடம் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையின் போது பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும்.

05.2 கட்டமைப்புச்சார் நேர்முகப்பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகள் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

**06. விண்ணப்பக் கட்டணம் :-**

விண்ணப்பதாரி,விண்ணப்பக் கட்டணம் ரூபா. 500/- ஐ **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** என்ற பெயருக்குக் கிடைக்கக்கூடியவாறாக வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

07. விண்ணப்பிக்கும் முறை :-

07.1 இவ்வறிவித்தலுடன் வெளியிடப்படும் விண்ணப்பப் படிவத்தினை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு சென்று தரவிறக்கம் செய்து அதனை பூர்த்தி செய்து, **விண்ணப்ப முடிவுத் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

07.2 விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"NP/07/10/01/202"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும், உரிய தகவல்களைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

07.3 விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளிற்கு நேர்முகத் தேர்விற்கான கடிதம் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பி வைக்கப்படும்.

07.4 விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது. அத்துடன் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம்.

## 08. ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :-

விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேணடும்

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை

(ii) செல்லுபடியான இலங்கை கடவுச்சீட்டு.

(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

## 09. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இக்கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சைக்கு முன்னரோ, கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின்போதோ அல்லது கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருவராயின் அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும் என்பதுடன் விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 10. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும். விண்ணப்பதாரிகள் அப்பகுதியின் கிராம சேவையாளர், சட்டத்தரணி, சத்தியப்பிரமாண ஆணையாளர், சமாதான நீதவான், பிரசித்த நொத்தாரிசு, கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணைபெற்ற உத்தியோகத்தர், ரூபா.854,880.00 க்குக் குறையாத தொகையை வருடாந்த திரட்டுச் சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவை உத்தியோகத்தர், மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

11. பரீட்சைத் திட்டம் :-

இது ஒரு கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையாகும். இக் கட்டமைப்புச்சார் நேர்முகப்பரீட்சையின் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக புள்ளிகள் வழங்கப்படும். **(மொத்தம் 100 புள்ளிகள்)**

| இல | புள்ளிகள் வழங்கப்படும் விடயப் பரப்புக்கள் | புள்ளிகள் | ஆகக் கூடிய உச்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| *01.* | **மேலதிக கல்வித்தகைமைகள்** | | **50** |
| *01.1* | உயிரியல் மருத்துவ பொறியியல் ( Biomedical Engineering) / மின்னியல் பொறியியல் (Electrical Engineering) / இலத்திரனியல் பொறியியல் (Electronics Engineering) துறையில் பட்ட மேற் பட்டம் (Master's Degree) | *30* | **30** |
| *01.2* | உயிரியல் மருத்துவ பொறியியல் ( Biomedical Engineering) / மின்னியல் பொறியியல் (Electrical Engineering) / இலத்திரனியல் பொறியியல் (Electronics Engineering) துறையில் பட்ட பின் டிப்ளோமா (Postgraduate Diploma) | *20* | |
| *01.3* | தொடர்புடைய துறையில் டிப்ளோமா (Diploma) | *10* ஒவ்வொன்றிற்கும் | **20** |
| 02 | **அனுபவம்** | | **20** |
| 02.1 | உயிரியல் மருத்துவ பொறியியல் ( Biomedical Engineering) / மின்னியல் பொறியியல் ((Electrical Engineering) / இலத்திரனியல் பொறியியல் (Electronics Engineering) துறையில் தொழில் அனுபவம் | | |
| 02.1.1 | ஓவ்வொரு ஆண்டிற்கும் | 10 | 20 |
| 02.1.2 | 06 மாதங்களிற்கு மேற்பட்டதும் ஒரு வருடத்திற்கு உட்பட்டதுமான காலப்பகுதி | 05 | |
| 03 | **தொடர்புடைய துறையில் ஆராய்ச்சிகள் மற்றும் வெளியீடுகள்** | | **25** |
| 03.1 | ஆராய்ச்சி மாநாட்டில் சமர்பிக்கப்பட்ட துறை தொடர்பான ஆராய்ச்சி கட்டுரைகள் | 10 | **10** |
| 03.2 | விண்ணப்பதாரியால் எழுதி வெளியிடப்பட்ட துறை தொடர்பான கட்டுரைகள் / இதழ்கள் | 05 ஒவ்வொன்றிற்கும் | **15** |
| **குறிப்பு :- ஆய்வு கட்டுரைகள் ஏதேனும் ஒரு வெளியீட்டில் சேர்க்கப்பட்ட புத்தகமாக வெளியீடப்பட்டிருந்தால் அதற்கு பிரத்தியேகப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது** | | | |
| *04* | உயிரியல் மருத்துவ பொறியியலாளர் பதவியுடன் தொடர்புடையதான அறிவு மற்றும் திறனுக்கு நேர்முக தேர்வு சபையினால் வழங்கப்படும் புள்ளி | | **05** |
| | மொத்தப் புள்ளிகள் | *100* | |

குறிப்பு :-

கட்டமைப்புச்சார் நேர்முகப்பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளது தர ஒழுங்கு வரிசை மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அல்லது குறிப்பிடப்படாத விடயங்களில் கருதப்படுகின்ற அல்லது கருதப்படாத ஏதேனும் தெளிவின்மை சம்பந்தமாக அல்லது மாற்றங்களை மேற்கொள்வது தொடர்பில் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அதே போன்று ஏதேனும் விசேட காரணங்களின் நிமித்தமாக குறித்த கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையை நடாத்த முடியாமல் போகும் பட்சத்தில் அது சம்பந்தமாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

13. இப்பதவிக்கான வெற்றிடம் நிரப்பப்படும்போது, அவ்வெற்றிடத்தினை நிரப்புவது சம்பந்தமான இறுதித் தீர்மானம் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினாலேயே மேற்கொள்ளப்படும்.

**கவனிக்கவும் :-**

(i) இவ் அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும், வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

(ii) இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் வேண்டுமென எதிர்பார்க்குமிடத்து, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவின் 021 221 9939 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(iii) இவ் அறிவித்தலில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில், தமிழ் மொழி உரையே மேலோங்கும்.

**ஆழ்வாப்பிள்ளை சிறி,**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
2025.12.18

ஆழ்வாப்பிள்ளை சிறி
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்